ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒரு கார்யஸித்தியில் எவர்களைச் சேர்த்தால் கெடுதியுண்டாகுமோ அவர்களைச் சேர்க்கக்கூடாது. எவர்களைச் சேர்த்துக்கொண்டால் ஆனுகூல்யம் கிடைக்குமோ; அவர்களைத் தேடிப்பிடித்து பன்முறை பணிந்து ப்ரார்த்தித்தாவது சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பது கார்யநிர்வாஹம் செய்பவர்க்குத் தெரிந்ததே. உதாரணமாக—குணக்கிராஹிகள் கோள் சொல்பவனைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. சேர்த்துக்கொண்டால் குணமே குலைந்திடச் செய்துவிடுவார்கள். குணவான்களைச் சேர்த்துக் கொண்டால் குணங்கள் மேலிடுமாதலால் அவர்கள் சிரமப்பட்டாவது சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். புண்ணியபூமியாகிய பாரத நாட்டில் புண்ணியவான்களுடைய கோஷ்டியில் பாபபுத்திகள்வந்து குருக்கிடுவது கார்யசித்தி இல்லாமற்போவதோடு அநர்த்த பரம்பரையும் நேரிடுவதற்கு காரணமாகிறது. அது விரைக்கோட்டைக்குள் எலியைவைத்துக் கட்டியதுபோலாகிறது. புண்ணியமென்றும், பாபமென்றும், கோவிலென்றும், குளமென்றும், வேதமென்றும், சாஸ்திரமென்றும், சொல்லிக்கொண்டு திரிபவர் குருக்கிடுவதாற்றான் கார்யம் கெட்டுப்போவதாக ஸாத்துவிகர் கூறுவதையே தற்காலத்தியவர்கள் திருப்பிக் கூறிவிடுகிறார்கள். இதில் எது ஸத்தியமென்பதை ஸாதுக்கள் கெவனிக்கவேண்டும். புண்ணியப் பேச்சு குறைந்ததால் பாரதநாட்டில் பல கஷ்டங்கள் நேருகின்றனவா? அல்லது வர்ணாசிரம தர்மம் நடந்துவருவதால் நேரிடுகின்றனவா? என்று பிரமாணத்தைக்கொண்டு நிச்சயிக்கவேண்டுமேயன்றி பிரஸங்கமேடையில் வாய்க்குவந்ததைப் பேசிவிடுவதால் நிச்சயிக்க முடியாது. பிரமாண மூலமாய் பேசும்பொழுது பிரமாணங்கள் வைதிகர்களுக்குத்தான் ஸாதகமாயிருப்பதாகக் கருதியே தற்காலத்திய சிலர் பிரமாணகிரந்தங்களை பிரமாணமல்லவென்று பாமரஜனங்களின் கூட்டத்தில் புகட்டி தங்கள் கக்ஷிக்கு ஆள்கூட்டம் சேர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். இத்தருணத்தில் வைதிகர்களும் தங்களது இயற்கைக் குணங்களான சமதமாதிகளையே அடைந்து சமாதானப்படுத்திக்கொண்டுவிடுகிறார்கள். இதைப்பார்த்து எதிர்வாதமில்லாத வியாஜ்யக்காரர்கக்ஷிபோல் விரோதிகள்கக்ஷி வலுத்துவிட்டதாக குணாகுணங்களைக் கெவனித்தறியச் சக்தியற்றவர்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள். பொறுமையாயிருப்பது பெருங்குணமாயினும் விவாதத்தில் எதிர்த்து வாதம்புரிவதிலும் பேசாமலிருந்துவிட்டால் அது பொறுமையிலிருந்ததாக ஆகாது. ஆனால் தங்கள்வாதத்தில் பலமின்மையைத் தான்காட்டும். அதோடு சிற்சில லௌகிக கார்யங்களில் எல்லோரும் கூடிக்கொள்ளும்பொழுது வைதிகப் பேச்சைப் பலமற்றதாகப் பேசிவிடுகிறார்கள், ஆகவே சிலர் கூடி எவ்வளவு வியவஸ்தை செய்யினும் அது பலவிடங்களிலும் பரவிப் பயன்படுவதில்லை. ஆனதால் புண்ணியா புண்ணியப் பேச்சு நடக்குமிடத்தில் பாபபுத்திகளைப் பூரவிடுவது கார்யத்தைக் கெடுத்துவிடும். அப்படிச்செய்யாமல் புண்ணியவான்கள் பலவிடங்களிலும் தர்ம தத்துவத்தைப் பிரசுரப்படுத்தி தர்மதேவதை நிலைத்திருக்கும்படி செய்வார்களாக. சுபம்.

பத்திராதிபர்

# ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஹூ ஐப்பசிமீ ௨௦ௗ


## தர்மதேவதையாவது தங்குமா?

தர்மபூமியாகிய தாய்நாட்டிலிருந்து மற்றதெல்லாம் வெளிப்பட்டுவிட்டாலும் தர்மதேவதையொன்றுவது தங்கி நிற்குமாயின் வெளிப்பட்டதெல்லாம் ஒவ்வொன்றுய்த் திரும்பிவந்துவிடும். லக்ஷ்மீதேவிக்கு மூத்தவளாகிய மூதேவிவந்து நுழைந்துவிட்டால் ஒவ்வொன்றுய் எல்லாம் வெளிப்பட்டுவிடும். அந்த நிலைமையிலும் தர்மதேவதையொன்றைமாத்திரம் தழுவித்தங்கும்படி செய்வோமாகில் மூதேவியின் ஆர்பாடமே ஒன்றும் பலிக்கமாட்டாது. தர்மதேவதையின் சக்தியால் போனதெல்லாம் திரும்பிவந்துவிடும். அக்காளும் தன்கார்யம் பலிக்காதென்று மெள்ள மெள்ள ஓடிப்போவாள். லக்ஷ்மீதேவி கடாக்ஷித்திடுவாள். எல்லாம் பரிபூர்ணமாய்விடும். இதைப்பற்றி பண்டைய காலத்துச் சரித்திரமொன்றுண்டு. அதாவது—ஒருதேசத்தில் ஓர் சக்கிரவர்த்தி மனுநீதி தவருமல் செங்கோல் செலுத்திவந்தான். அவன் சகல குணங்களும் நிறைந்தவன். மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாதுகாப்பவன். ஸத்தியஸந்தன். ஒருக்கால் அவனது ஸத்தியவிரதத்தைப் பரிசோதிக்கப்பிரியப்பட்ட தேவர்கள் மூதேவியை அவனுடைய அரண்மனையில் பிரவேசிக்கச் சொன்னர்கள். அக்காளுமதற்கோர் உபாயங்கருதினள். அதாவது—சந்தைக்கூட்டம்கூடி ஸகல ஸாமான்களும்விற்று வாங்கி வியாபாரம் பண்ணிக்கொண்டிருக்குமிடத்தில் ஒருவருய்வந்து ஒருசாமானையும் வாங்காமலிருக்கும்படி தந்திரமாய்ச் செய்துவிட்டாள். அப்பொழுது வியாபாரிகள் பலவிடங்களினின்றும் கொண்டுவந்த சாமான்கள் விற்பனையாகாமையால் வருந்தி அரசனிடம் அறிவித்துக்கொண்டார்கள். அரசனும் அப்படி எவரும் வாங்காமலிருக்கக்கூடாதென்று உத்திரவிட்டு, பிரஜைகள் வாங்கினபிறகும் பாக்கி சாமான்களிருக்குமாயின் அதன் விலையைக்

கொடுத்து அரண்மனைக்காக வாங்கிவந்துவிடும்படி ஆக்ஞை செய்தான். அவ்வாறு நடந்துவருகையில் மூதேவி பிரமஹத்யாஸ்வரூபந்தரித்துத்தன்னை சந்தைக்குக்கொண்டுபோகும்படி தேவர்களிடம்சொல்ல, அவர்களின் ஆக்ஞைபெற்ற ஒருதேவன் வியாபாரிவேஷந்தரித்து பிரம்மஹத்யாவடிவமான மூதேவிப் பதுமையை வியாபாரத்திற்காக சந்தைக்குக்கொண்டுவந்தார். சந்தைக்குவந்த ஜனங்களெல்லாம் இந்தவிந்தையைக்கண்டு என்னவென்று கேட்கும்பொழுது அதன் சொரூபத்தையும், தொட்டது தொலங்காமலும் போனவிடம் பாழாகும்படியும்செய்யும் சக்தியையும் சொல்லக்கேட்டுநடுங்கிப்போய்விட்டார்கள். சாமான்களெல்லாம் சிலவழிந்துவிட்டன. இதொன்றுமாத்திரம் வியாபாரத்திற்காகவென்று வந்தது விற்பனையாகவில்லை. கடைசியாய் அரண்மனை உத்யோகஸ்தன்வந்துபார்க்கையில் இதொன்று மாத்திரம் பாக்கியிருப்பதாகக்கண்டு விலைபேசினான். முப்பது கோடிப்பவுன் இதன்விலை. இதைப்போல் தொட்டது தொலங்காமலும், போனவிடத்தைப் பாழாக்கவும்செய்ய வேறொன்றுக்கும் திறமையிருக்காது. அவ்வளவு சக்திவாய்ந்தது இது—என்று சொல்லக்கேட்டு அதை வாங்கபயந்து அரசனிடம் தெரிவிக்கவே அரசனும் தன்ஸத்தியவிரதத்தைப் பரிபாலிக்க அதைவாங்கிவரும்படி உத்தரவளித்தான். அவ்வளவு விலையும்கொடுத்து வாங்கியும்விபரீதமாகுமேயென்று மந்திரிகள்சொல்லியும்கேளாமல்ஸத்தியத்தையே பெரிதாக நினைத்தான். ராஜாக்ஞைப்படி அவ்வளவு பவுனைக்கொடுத்துவாங்கி அரண்மனைக்குள் கொண்டுவந்துவிட்டான். இவ்விதமாக மூதேவிவந்துபூரவே ராஜ்யலக்ஷ்மி முதலியவர்கள் வெளிப்படுவார்களேயென்று மந்திரிகள் தெரிவிக்கும்பொழுது அரசன் கடுஞ்சினங்கொண்டு மந்திரிமுதலிய ஸகல உத்யோகஸ்தர்களையும் வேலையைவிட்டு நீக்கி வெளியேபோகலாமென்று ஆக்ஞாபித்தான். வேலைக்காரர்கள்வெளிப்பட்டார்கள். ஏகாகியாய் மிஞ்சின அரசன் இரவில் கத்தியைக் கையிலேந்தி கோட்டைவாசல்வந்து நின்றான். நடுநிசிவருகையில் ஸர்வாங்க சுந்தரீயான ஒரு ஸ்திரீ ஸர்வாபரணபூஷிதையாயிருந்தும் பெரும் துக்கத்தால் புலம்பிக்கொண்டு வெளியிற்செல்லவருவதைக்கண்டு அரசன் நீயார் என்று வினவ, அம்மாது சிரோமணியும் "நான் ராஜ்யலக்ஷ்மி இவ்விடத்திலேயே ஸ்திரமாய் இருப்பதாய் நினைத்

தேன் ராஜா மிககுணசாலி ஆயினும் என்னகாலகதியோ தெரியவில்லை. மூதேவியைவாங்கிவிட்டான். அதனால் நான் போகிறேன்' என்றாள். அரசனும் போகலாமென்று அனுமதிசெய்துவிட்டான். லக்ஷ்மியும் வெளிப்படவே விஷ்ணுவும் அவளையாசிரயித்த சகலதேவர்களும் வெளிப்பட்டார்கள். அதையும் அனுமதிசெய்துவிட்டான். இப்படி எல்லாம்வெளிப்பட்டுவிட்டன. கடைசியாகதருமதேவதைவெளிக்கிளம்பிவந்தாள். அவள்வெளியேறுவதை அரசன் சம்மதிக்கவில்லை. பலவுபாயங்களால் நிருத்திவைத்துக்கொண்டான். வெளிப்பட்டவர்கள் தர்மதேவதை பின்தொடர்ந்து வாராததைக்கண்டு நாம் மாத்திரம் வெளிப்பட்டுவிட்டதால் என்ன ஆகும். தர்மதேவதையொன்று தங்கியிருந்தால் அவளை நாடி நாமும் திரும்பிவரவேண்டியதாகத்தான் நேரும். தர்மதேவதையொன்றுதான் தரணியிலுள்ளோர்க்கும், தேவர்கட்கும் ஜீவனத்தைத்தருபவள். அவளைவிட்டால் வேறுவழியில்லை. அவளைவிட்டு நாம்எங்குபோவது என்னசெய்வதென்று ஒவ்வொருவராய் வெளிப்பட்டவர்கள் எல்லோரும் திரும்பிவிட்டார்கள். வேலைக்காரர்களும் வந்துவிட்டார்கள். மூதேவி இருக்க வழியில்லாமலாயிற்று அவள் வெளிப்பட்டாள். ராஜ்யம் முன்னுக்குமேல் அதிகம் செழிப்பாயிருந்தது தேவர்களும் சக்ரவர்த்தியின் சத்தியவிரதத்தையும், தர்மபுத்தியையும் புகழ்ந்து பரமானுகிரகம் செய்தார்கள், அதுபோல் நம்பாரதநாட்டில் எதுபோனாலும் தர்மமொன்றுமாத்திரம் தங்கி நிற்குமானால் ஒருகுறைவுமேற்படாது. சகலசித்தியும்கிடைக்கும், ஆகவே அதாவது தங்குமாவென்று தார்மிகர் தவம்புரிகின்றார் அதையே அனுஸரித்து யாவரும் இஷ்டசித்தியையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# விவேகிகளுக்கு விக்ஞாபனம்.

ஸ்ரீ ஸ்ரீஉத்திராதி மடத்து ஸ்ரீபாதங்களுடைய சன்னிதானத்தில் மதருஸ் உத்திராதிமடத்தில் வேதாந்த விமர்சினி ஸபையில் புத்த ஜயந்தி தினத்தில் தர்க்க வித்வான் பண்டித சிரோமணி வீரசோழபுரம் கிருஷ்ணாசாரியாரால் செய்யப்பட்ட

உபந்யாஸ சுருக்கத்தைப்பார்த்து அடங்காத ஆச்சர்யமும் அருவருப்பு மடைந்தோம். வேதபாஹ்யமான மதத்தை ப்ரதிஷ்டாபனம் பண்ணின புத்தருடைய ஜயந்தியை வேதப்ராமாணிகாளென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்ரீ ஸ்ரீ உத்திராதிமட சுவாமிகள் ஸன்னிதானத்தில் கொண்டாடினார்களென்பது புத்திமான்கள் கவனிக்கத்தக்க விஷயம்

வாஸுதேவன் பௌத்தாவதாரம் செய்ததனுடையவும் ஈச்வரன் சங்கராக அவதரித்ததனுடையவும் பலன் இன்னதென்ற ரஹஸ்யம் இந்தியாவில் இதுவரையில் மஹான்கள் யாவருக்கும் புலப்படாமல் இப்பொழுது ஆசார் அவர்களின் அதிஸூக்ஷ்ம புத்திக்குத்தான் வெளிப்பட்டு விட்டது. மதப்ரவர்த்தகர்களுக்கு காரணபூதர்களான பரமகாருணிகரான பகவான் வாஸுதேவனும் பரமயோகியான பகவான் மஹாதேவனும் ஜீவர்களனைவரும் ஞானம் பெற்று வேதங்களின் உட்பொருள்களை அறிந்து அவைகளை அனுஷ்டித்து தங்களைச்சேர்ந்து நற்கதி அடையக்கூடாதென்று கருதி இவ்வவதாரங்கள் செய்தார்களென்று கூறியிருக்கு மாசாரவர்கள் பகவதபசாரத்திற்கு பாத்திராகிவிட்டாரே என்று துக்கிக்கிறோம். ஸர்வலோக ஹிதரும் பரமதயாளுவுமான வாஸுதேவன் ஜகத்திலுள்ள ஜீவர்களை குமார்க்கத்தில் செலுத்திக் கெடுத்துவிடுவதே தனக்கு நித்யத்தொழிலாகக் கைக்கொண்டு வேதார்த்த விசாரம் செய்பவர்களை எல்லாம் பொருளறியாது மயங்கச்செய்கிறுரென்று கூறி அவருக்கு இப்பெரும் அபவாதத்தைக்கற்பித்த பக்தசிரோமணியாகிய கிருஷ்ணுசாரைக்கூட வாஸுதேவன் தனது கருணையினல் அதோகதியடையச்செய்யாரென்று நம்புகிறோம்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

தர்மம் தளர்ந்து அதர்மம் தலையெடுக்கும் காலத்திலெல்லாம்தான் அவதாரம் செய்து தர்மத்தை நிலைநாட்டி ஸர்வஜீவர்களும் வேத மார்க்கத்தில் சென்று ஸத்கதி அடையும்படி செய்வதாக ப்ரதிக்ஞைசெய்தபகவான் ஜீவர்களுக்கு வேதத்தில் ப்ராமாண்ய புத்தி ஏற்பட்டு தர்மானுஷ்டானங்களில் அதிக ஊக்கம் வந்து அவர்கள் ஸத்கதி அடையும் தருணத்திலெல்லாம் தான் அவதாரம் செய்து

அவர்கள் புத்தியை மாற்றி அதோகதி அடையச் செய்வதில் தீக்ஷை கொண்டவராகக் கூறிய கிருஷ்ணாசாருடைய அறிவைப் பற்றி புத்திமான்கள் யாவரும் நகைபுரிவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வளவு அழகான தன் ஸித்தாந்தத்திற்கு பாத்ம புராணத்திலிருந்தும் ஆசார் ப்ரமாணம் எடுத்துக் கூறுகிறார். புராணம் தெரிந்தவர்களும் அதிலாராய்ச்சி செய்தவர்களும் ஆசார் கூறிய சுலோகங்கள் அனேக ப்ரதிகளிலில்லை என்றும், அவைகள் நவீனமாகக் கற்பிக்கப்பட்டவை என்றும் தக்க காரணங்களால் தீர்மானித்திருந்தும் ஆசாரவர்கள் கூறியிருப்பது வேதத்திலேயே மாடாராயணசுருதி, காடளுயணசுருதி என்று கற்பனை செய்பவர்களுடைய சிஷ்ய பரம்பரைகளுக்கே பொருத்தமாயிருக்கும்.

ப்ராம்ஹண ஜாதியில் பெரும்பாலான அத்வைத மதஸ்தர்களை ஆஸுர ஸம்பத்துடையவர்களென்று தூஷித்து வீணாக ப்ராம்ஹணர்களுக்குள் கலகத்தை உண்டு பண்ணி அநேக ஸாதுக்களுடைய மனதைப்புண்படுத்தும்படியான வார்த்தைகள் சொல்வது விவேகிகளுக்கு அழகோ? மாந்தர்களனைவரும் ஞான முதிர்ச்சி அடைந்து மதவிஷயமான துரபிமான மொழிந்து எல்லா மதங்களும் ஈச்வரனை அடையும் மார்க்கத்தை அவ்வவ்வதிகாரிகளுக்குத் தக்கபடி காட்டுபவைகளெனக் கருதி மதச் சச்சரவு ஒழிந்திருப்பதே நலமென நினைக்கு மிக்காலத்தில் கிருஷ்ணாசாரவர்களுடைய மதத்வேஷ ப்ரகடன உபந்யாஸத்திற்கு பதில் எழுதுவது அனுசிதமாயினும் அவர் கூறியிருக்கும் அதி நூதனமான அபிப்பிராயங்களின் ஆபாஸத்தை ஒருவாறு வெளிப்படுத்துவது தகுமெனக் கருதினோம். இதை ஞானவான்கள் பொறுத்துக் கொள்வாராக, இனியாவது ஆசார் முதலியவர்கள் தங்கள் தங்கள் மதத்தை அறிந்து அதன்படி நடப்பதை விட்டு இதர மதங்களை வீணாக தூஷித்து கலகங்களை உண்டு பண்ணாமலிருக்கும்படி ஈச்வரன் அவர்களுக்கு நல்லறிவு அருள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ராமச்சந்திரய்யர். மைலாப்பூர்.

# குறைவுடையோர் கூட்டம்,

ராமஸேதுமுதல் ஹிமயமலைவரையுள்ள ஸகலதேச வாஸிகளான குறைவுடையோர்களின் கூட்டம் திருவண்ணாமலையின் மேற்றிசையிலுள்ள தாழ்வரையில் ஓர் ஸமயம் கூடிற்றாம். இங்கு குறைவுடையோரென்றது கைநொண்டி, கால்முடம், முதுகு கூனல் முதலிய அங்கஹீனர்களையும், குஷ்டம் முதலிய நோய்களால் குறையுமவயவமுள்ளவர்களையும், குருடு, செவிடு, ஊமை முதலிய இந்திரியஹீனர்களையும் மற்றும்இதைப்போன்ற குறைவுடையவர்களையும் குறிக்கும். எல்லோரும் வந்துசேருவதற்கு அனுகூலமாயிருப்பதற்காக ஒருவருஷம் முந்திய கூட்டத்திற்காகவுள்ள அழைப்பு சமாசாரம் அனேகர் முகவழியாக அனுப்பப்பட்டதாம். கண்ணும் கருத்தும் காயபலமுமுள்ள ஒருவரை அவைத்தலைமைவஹிக்கப் பலரிடம்வேண்டிக்கொண்டும், அதைக் குறைவென்றுகருதி எவருமங்கீகரிக்கவில்லை. பல வகுப்புக்கார்களும் தத்தமது முன்னேற்றத்தைக்கருதி மஹாநாடு கூடிவரும் இந்நாளில் குறைவுடையோரான நம்மினத்தாரும் கூட்டம் போட்டு கதிமோக்ஷத்தையடையலாமே என்ற ஆசைகொண்ட சிலர் கூட்டத்திற்காகக் குறிப்பிட்டநாளுக்கு சின்னாள் முன்னதாகவே ஆங்குசென்று தங்களாலியன்றவரை ஸ்தலவஸதி முதலியவைகளை ஏற்படுத்தினார்கள். நாளிடையில் குறைவுடையோர் பலரும்வந்து கூடினார்கள். அனேக ஆயிரக்கணக்காகக் குறைவுடையோர் கூடினபோது குறிப்பிட்ட நாளும்வந்தது. காலை எட்டுமணிக்குத் தாழ்வரையில் எல்லோருமிடம் பார்த்திருந்தார்கள். வந்தவர்களில் வயதுமுதிர்ந்த கூனமுதுகுள்ள கூனனொருவனைத் தலைமைவகிக்கும்படி வேண்டிக்கொண்டு ஸபையோர் அனுமதியின்பேரில் ஒரு குன்றின்மேல் உட்காரவைத்து, வரவேற்புக்கமிட்டித் தலைவான முனியன் என்ற மூக்கறையன் வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுத்தான். அக்கிராஸனர் ஆஸனத்திலமரும்போது கரகோஷம் செய்யவேண்டுமென்ற ஆசைகொண்டும் நொண்டிக்கையர்களுக்கு முடியவில்லை, குருடர் காணமுடியாமையால் கைகளிலிருந்தும் ஸமயந்தெரிந்து கரகோஷம்செய்யமுடியவில்லை. ஏதோசிலர் ஆரவாரஞ்செய்தார்களாம். அதற்கிடையே அக்கிராஸனர் எழுந்திருந்து தன்னுடைய முகவுரையைக்கூற ஆரம்பித்தார். அதன் சுருக்கமாவது—இந்தக் கூட்டத்தில் எனக்கு இந்த பதவியையளித்த ஸபையோர்களிடத்தில் நான் நன்றிபாராட்டுகிறேன். நாமெல்லோரும் இப்பொழுது

இங்கு நம்முடைய குறைகளை நீக்கிக்கொண்டு முன்னேற்றத்தை யடைய உபாயத்தை ஆலோசிப்பதற்குக் கூடியிருக்கிறோம். நம குறைகளைநீக்க நாமே வழிதேடவேண்டுமேயன்றி வேறெவர் தேடிக்கொடுக்கப்போகிறார்கள். கண்ணும் கருத்துமுடையோர் தன்கார்யமே பெரிதெனப் பார்க்கிறார்களேயன்றி கையாலாகாத கபோதிகளாகிய நம்மினத்தாரின் குறைகளை கெவனிப்பதேயில்லை. குறைவுடையோரான ஏழைகள்மீது இரக்கங்கொண்ட புண்ணிய வான் ஏதேனும்தானம் தருமம் செய்வானாகில் காயபலமுடை யவர்கள் முந்திக்கொண்டு நம்மவர்க்குக் கிடைக்காமலும் செய்துவிடுகிறார்கள். சிலர் நம் சிலரைக் கண்ணாரக்கூடப்பார்க் கப்படாதென்கிறார்கள். அப்படிப் பார்க்கும்படி நேர்ந்து விட்டால் பச்சைமரத்தைப் பார்க்கவேணுமென்கிறார்கள். நம் மைப்பாபஜன்யமென்று இகழ்ந்து பேசுகிறார்கள். உண் மையில் இவர்கள் பாபத்திற்கு பயந்தவர்களானால் அங்கா வயவங்கள் குறைவில்லாமல் புஷ்களமாய்க்கிடைத்த மேலான சரீரத்தையடைந்து இவர்கள் செய்யும் புண்ணியம் என்ன? காமவெறிபிடித்துக் கைம்பெண்களின் கற்பையழிக்க வழிகாட்டுகிறவர்களும், கோபாவேசங்கொண்டு கடவுளே இல்லை யென்றும், குருமார்களே கொடிய வஞ்சகக்காரர்களென்றும், கௌரவப்பட்ட மேன்ஜாதிக்காரர்கள் மோசக்காரர்களென்றும். கூச்சலிடுபவர்களும் புண்ணியாத்துமாக்களாம். முன்ஜன்மத்தில் செய்த பாபத்தாலிப்படிப் பரிதவிக்கிறோமே. இப்பிறவியிலாவது "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழியை நம்பிக்கடவுளின் திருநாமங்களைச்சொல்லிக்கொண்டுபிச்சையெடுக் கத்தெருத்தெருவாயலைந்து "பாபஞ்செய்தால் இக்கதிதான் பின்னிட்டுவரும். பாபஞ்செய்யாதீர்கள்" என்று உபதேசிப்பது போல் திரிந்துவரும் நம்மினத்தார் பாபிகளாம். இவர்கள் செய் யுந்தீவினைக்குப்பயனாக இக்கதிவருவதற்கு எத்தனை நாளாகும். சாஸ்திரங்களில், அநாதர்களும், தீனர்களுமான கூனன் குருடன் ஊமை முதலியவர்களின் அன்னபானாதிகளுக்கு வழிகற்பித்து விட்டுத்தான் கண்ணும் கருத்தும் வீடும்வாசலுமுள்ளவன் சாப் பிடவேணுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. கிரஹஸ்தர்களு டைய வீட்டில் நமக்கு கிடைக்கவேண்டிய முதல்பாகத்தை வேக மாய்ச்சென்று வாங்கிக்கொண்டுவிடுகிறார்கள். இந்தப் பாபிகள் அடியோடு அழிந்தாலொழிய நம்மவர் பிழைக்க வழியில்லை.

இதைப்பற்றி அதிகம் பேசவேண்டுமென்ற ஆசை யிருந்தும் சக்தியில்லாமையால் பேசமுடியவில்லை. இதைப்பற்றி எனது நண்பர் பொன்னம்பலனார் பேசுவார் என்று அக்ரா ஸனர் ஆக்ஞைசெய்தார். உடனே கண்களில்லாக் குருட னை அன்னாருமெழுந்து பேசத்தொடங்கினார். அதன் சுருக்க மாவது— குறைவுடையோரிடையில் கண்ணிழந்தானுமொரு வனே. பார்த்துப்படித்துப் பலவிஷயங்களைத் தெரிந்துகொள்ள பாக்யமிழந்தவனாயினும் பலபேர் சொல்லைக்கேழ்க்கச் செவியை யாவது பகவான் தந்தருளியதால் அப்படிக்கேட்டுத்தெரிந்து கொண்ட சிலவற்றை தங்கள்முன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் எனக்கு அக்கிராஸனர் ஆக்ஞைசெய்ததற்கும் சபையோர் சம்மதித்ததற்கும் வந்தனமளிக்கிறேன். குறைவு டையோர் ஒவ்வொருவரும் அடைந்த குறைகள் அவரவர் வேண்டிக்கொண்டதின்பேரில் நேர்ந்தவையல்ல. யாருங்கண்டு வெறுக்கத்தக்கதை எவனாவது வேண்டிக்கொள்வானா! சிலருக்கு பிறவிலேயே இக்குறை காணப்படுகின்றதாம். என்னையே இதற் கோர் உதாரணமாகக் கொள்ளலாம். நான் பிறவிக்குருடன். இதுபோலவே இங்கு கூடியிருக்கும் மற்ற அங்கஹீனர்களும் திருஷ்டாந்தமாவார்கள். இவர்களெல்லோரும் பிறவிவந்ததின் பின் இக்குறை தமக்கு உண்டாகவேண்டுமென்று வேண்டிக் கொள்ளவேயில்லை என்பது நிச்சயம். வேண்டிக்கொள்ள விருப் பமும் விவேகமுமுண்டாகக்கூடியவயது வருவதற்குமுன்னமேயே அன்னையின் கர்ப்பாசயனத்தினின்று வெளிப்படும்பொழுதே நேர்ந்தவையல்லவா இக்குறைகள்; பலகாலம் சென்றபின் சில ருக்குக் குறைகளுண்டாயினவாம். குஷ்டத்தால் சிலருக்கு பாதி வயதில் கைகால்கள் குறைந்தனவாம்.

காசம் காமாலை முதலிய ரோகங்களாலும், வைசூரி முதலிய வைகளாலும் சிலருக்குக் கண் குருடாயிற்றாம், இப்படி ஆக வேண்டுமென்று அவர்கள் தமது இளமைப் பருவத்திலாவது யௌவனத்திலாவது பிரார்த்தித்துக்கொள்ளவேயில்லை. ஆனால் எவ்விதக்குறையும் உண்டாகக்கூடாதென்றுதான் கண்டகண்ட கோவில்களில் கையெடுத்துக் கும்பிட்டு வேண்டிக்கொண்டார்க ளேயன்றி விபரீதமாக வேண்டவில்லை. இப் பிறவியில் வேண் டிக்கொள்ளாததுபோலவே முப்பிறவிகளில் எப்பிறவிகளிலும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கவே மாட்டார்கள், ஆயினும் கை

கண்டபலனுக குறைகள் உண்டாயிருக்கின்றன, இதற்குக் காரணமொன்று அவசியமிருந்திருக்கவேண்டும். அது எவருடைய பிரத்தியக்ஷத்திற்காவது யுக்திக்காவது எட்டியதாகத் தெரியவில்லை அதைச் சாஸ்திரம் சரிவரக்கூறுகின்றதாம், சோதிட நூல்களில் அநிஷ்டாத்தியாயம் முதலிய விடங்களில் அங்கஹீனனுய்ப்பிறப்பதற்குள்ள யோகங்கள் கூறப்படுகின்றன' அதுபோலவே கர்மவிபாக கிரந்தங்களிலும் அந்த யோகங்களுக்கும் காரணமாயுள்ள பூர்வஜன்மபாபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வைத்திய நூல்களிலும் கர்மரோகங்களுக்குக் கர்மவினையைக்கர்மகாண்டத்தில் கூறியபடி பிராயச்சித்தாதிகளால் தீர்த்துவிட்டு சிகித்ஸைசெய்யவேண்டுமென்று விதிக்கப்படுகின்றது. அவ்வாறு சிகித்ஸைசெய்யப்பட்ட ரோகங்கள் அனுகூலப்படுவதாகக்காணப்படுகின்றதாம். ஆகவே அந்த காட்டப்பட்ட காரணம் உண்மையென்றே புலப்படுகின்றதல்லவா. இப்படி ஒவ்வொரு ரோகத்திற்கும் சோதிடநூல் வைத்தியநூல் கர்மவிபாகம் இவைகளில் கூறப்படும் காரணங்களையும் பரிஹாரங்களையும் விரிவாக வீரஸிம்மாவலோகம் என்ற கிரந்தம் விசதமாகக் கூறுகின்றதாம். இந்த விஷயத்தில் அந்தச்சோதிடநூல் முதலியவை பிரமாணமாவது போல் சுருதிஸ்மிருதி முதலிய நூல்கள் பிரமாணமென்பதில் தடையில்லை. அப்படியிருக்கையில் தற்போது சிலர் கோயிலுமில்லை. குளமுமில்லை. தைவமுமில்லை. சாஸ்திரமுமில்லை. சம்பிரதாயமுமில்லை என்று கண்டபடிபேசிவருகிறார்களாம், இதனால் எளியவர்கள்மீது இரக்கங்கொண்ட புண்ணியவான்களின் புத்தியும் பிரமத்தையடைந்து பழையவழக்கத்தைமாற்றி பாபத்தையேதேடப்பார்க்கிறதாம். ஆகையால் இன்னுளில் நம்மவர் ஜீவனம் எப்படியாகுமோ தெரியவில்லை. இவர்கள் பிரஸங்கமேடையிலேறி எல்லோரையும் ஸஹோதர ஸஹோதரிகளாக அழைப்பதும் ஸமத்துவம் பாராட்டவேண்டுமென்றுரைப்பதும் சுதந்திரத்திற்காக உழைப்பதும் எவ்வளவு வரைக்கும் இருக்கும் என்பதை எனது நேசன் கண்ணன் கூறுவாறென எனது பிரஸங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

உடனே அக்கிராசனர் இன்று நாழியாய்விட்டபடியால் மற்றதை நாளை வைத்துக்கொள்வோமென்று ஆக்ஞைசெய்ததின் பேரில்ஸபைகலைந்தது.

சுந்தரம்,

# ஸ்ரீ நடேசஸ் துதி.

(830-வது பக்கத்தொடர்ச்சி)

पाण्ड्यो दुर्मदसंज्ञको दुरितकृद्विप्रो भवन्तं सकृत्
दृष्ट्वा कामसमाकुलोऽपि भगवन् लेभे पदं शाश्वतम् ।
आनन्दामृतदानलोलभुवने किंदुर्लभं विद्यते
त्वत्पादांबुजदर्शने सति नृणां तत्तावकांघ्रिं भजे ॥३१॥

தூர்மதன் என்று பெயருள்ள மகாபாபியான பாண்டிய தேசத்திலுண்டான ஒரு பிராமணன் ஸ்திரீகாமுகனாயிருந்து கொண்டும் ஒருதடவை உம்மை தரிசித்து நித்யமான மோக்ஷ பலத்தை அடைந்தான். ஆனந்தாமிர்தத்தைக் கொடுப்பதில் ஆசையுள்ள ப்ரபுவே உம்முடைய திவ்ய சரணகமல தர்சனம் ஏற்பட்டபொழுது உலகில் மனுஷ்யர்களுக்கு கிடைக்கத்தகாதது என்ன இருக்கின்றது. ஆதலால் உம்முடைய சரணத்தையே பஜிக்கின்றேன்.

பாண்டிய தேசத்தில் வேதசாஸ்திர பாரங்கதரான ஒரு வைதிக பிராமணருடைய குமாரனை தூர்மதனென்று பெயருள்ள ஒரு பிராமணன் ஜன்மாந்திர பாபகர்மவசத்தால் பல பெரியார்களுடைய உபதேசித்திலும் திருந்தாமல் சுராபானம் பரஸ்திரீ கமனம் முதலான பாபகர்மாக்களையே செய்துவரும் சமயம் பந்துக்கள் ஜாதியிலிருந்தும் விலக்க அரசனும் தேசத்திலிருந்து துறத்த பலதேசங்கள் திரிந்து மிலேச்சாசாரத்துடன் மார்கழி மாசம் ஆருத்ரா தெர்சன உத்ஸவ சமயத்தில் சிதம்பரக்ஷேத்ரம் வந்து உத்ஸவாங்கமான தாஸிஸ்திரீகள் நர்த்தனங்களையும் மேளக் கச்சேரி சங்கீதக்கச்சேரிகளையும் பார்த்துக்கொண்டு கேட்டுக் டுக்கொண்டு பக்தியில்லாமல் ஸ்ரீ சபாநடேசருடைய திவ்யநர்த்தனத்தையும் தர்சித்து உத்ஸவமுடிந்தபின் விந்தியபர்வதஞ்சென்று ஸர்ப்ப தம்சத்தால் பரலோகமடைந்தான். அப்பொழுது யமதூதர்களும் சிவதூதர்களும் அவனை அழைத்துப்போகவந்து கலஹஞ் செய்துகொண்டு யமதூதர்களை அடித்துத் துறத்திவிட்டு சிவதூதர்கள் தூர்மதனை உபசாரத்துடன் அழைத்து கைலாசஞ் சென்றார்கள். யமதர்மராஜாவும் தங்கள் தூதர்கள் மூலமாய்

சமாசாரத்தெரிந்து சித்திரகுப்தனைக்கொண்டு நன்றாய் கணக்கு களைப்பார்த்தும் துர்மதனுக்கு ஒருபுண்ணியகர்மாவுமில்லாததைத் தெரிந்து கோபத்துடன் கைலாசஞ்சென்று அபாசங்காரான நந்தி கேசுவாரைத் தரிசித்து மகாபாபியான துர்மதன் விஷயமாக சிவதூதர்கள்செய்த அவமானம்சகிக்கமுடியவில்லை, என்வேலையை இப்பொழுதே ராஜீநாம்செய்துவிடுகிறேன் என்று தெரிவிக்க துர்மதன் இடைவிடாமல் மகாபாபகர்மாக்களை செய்தபோதிலும் சிதம்பரக்ஷேத்திரத்தில் பாபகர்மாக்களைச்செய்யாமல் ஒருதடவை ஸ்ரீ நடராஜநுடைய திவ்ய நர்த்தனத்தை தரிசித்த மகாபுண்யத் தால் பரமசிவ திவ்யபதமடைந்தான், ஆகலால் உன்னுடைய தூதர்கள் செய்தகார்யமும் அதையனுஸரித்து நீ வந்தகார்யமும் மிகவும் குற்றத்திலும் குற்றமானது. இத்தடவை மன்னித்தேன் என்று ஆக்ஞாபித்து சிவபக்தர்களுடைய பல அடையாளங்களை உபதேசித்தருளினார்—என்கிற இதிஹாஸத்தை புண்டரீகபுர மாகாத்மியத்தில் இரண்டாவது அத்யாயத்தில் ஸ்ரீ வேதவ்யாஸ மஹர்ஷி ஜைமினி மஹர்ஷிக்கு உபதேசித்திருக்கின்றார். (31)

श्रेष्ठं स्थानमिदं सभेश भुवने तस्माच्च तीर्थं महत्
तस्मान्नाथ चिदंबरं तदधिको मन्त्रश्च तस्माद्भवान् ।
त्वत्तस्त्वत्पदसारसं नटपते श्रेष्ठं च तस्मादहं
हित्वा क्षुद्रफलप्रदान् सुरगणान् त्वत्पादपद्मं भजे ॥ ३२ ॥

சபாபதே! உலகில் இந்த சிதம்பர க்ஷேத்ரமானது உத்தமம். இதைக்காட்டிலும் இங்குள்ள சிவகங்கை என்னும் தீர்த்தம் மிக உத்தமம். இதைக்காட்டிலும் சிதம்பரமென்னும் ஸ்ரீ மந்நடராஜ ருடைய நர்த்தனஸ்தானமான சித்ஸபைமிக உத்தமம். இதைக் காட்டிலும் சிதம்பரபஞ்சாக்ஷர மகாமந்திரமானது மிகஉத்தமம். இதைக்காட்டிலும் நடனபதியானநீர் உத்தமோத்தமர். உம்மைக் காட்டிலும் உம்முடைய திவ்ய ஸ்ரீ குஞ்சித சரணகமலம் மிகச் சிரேஷ்டமானது. ஆகையால் அல்பபலத்தைத் தருகின்ற மற்ற தேவகணங்களைவிட்டு உம்முடைய சரணகமலத்தையே பஜிக் கின்றேன். இவ்வாறே ஸ்ரீ சிதம்பர மாஹாத்மியத்தில் 24-வது அத்யாயத்தில் வியாக்ரபாத மஹர்ஷி ஹிரண்யவர்ம சக்ரவர்த்திக்கு உபதேசிக்கின்றார்.

भूमौ स्थानमिदं श्रेष्ठं स्थानात्तीर्थं महत्तरम् ।
तीर्थाच्चिदंबरं श्रेष्ठं श्रेष्ठो मन्त्रश्चिदंबरात् ॥
मन्त्रान्महेश्वरो देवः महादेवो महानटः ।
देवात् श्रेष्ठतमस्तस्य श्रीमान् ताण्डवभूषितः ॥
भवांभोधिमहापोतः पादः पद्मारुणाच्छविः ।
तस्य दर्शनमात्रेण सकृत्पापी च मुच्यते ॥ என்று ॥१२॥

कैलासाचलताण्डवं पशुपते कात्यायनी केवलं
पश्यत्यत्रतु सर्वदा नटपते पश्यन्ति मर्त्या अपि ।
किंच त्वन्नटनेक्षणेन मनुजः प्राप्नोति मुक्तिं परां
तस्मात्सर्वमहं विहाय चरणं भक्त्या भजेतावकम् ॥१३॥

ஓ பசுபதே கைலாச பர்வதத்தில் உம்முடைய தாண்டவத்தை பார்வதி தேவிமட்டும் தர்சிக்கின்றாள். இச்சிதம்பர க்ஷேத்திரத்திலோ எப்பொழுதும் மநுஷ்யர்களும் தர்சிக்கின்றார்கள். ஓ நடநாயக! மேலும் உம்முடைய நடந தர்சனத்தினாலேயே மஹர்ஷிகளால் மஹா தபோவிசேஷங்களாலடையக்கூடிய பரம முக்தியையும் மூடனான மனுஷ்யனுமடைகின்றான். ஆகையால் சகல தேவதைகளையும் விட்டு உம்முடைய சரணத்தையே பக்தியால் பஜிக்கின்றேன்.

இவ்வாறே சிதம்பரமாகாத்மியம் 24-வது அத்யாயத்திலும் சூதசம்ஹிதை முக்திகண்டத்திலும் ஸ்ரீ நந்திகேச்வரர் சௌனக மஹர்ஷிக்கு உபதேசிக்கின்றார்.

कैलासे सर्वदा देवः ताण्डवं तनुते मुने ।
केवलं तमुमादेवी पश्यत्यन्यो न पश्यति ॥
पुण्डरीकपुरे किन्तु भगवाननिशं शिवः ।
श्रीमदभ्रसभामध्ये तनोत्यानन्दताण्डवम् ॥
तत्सनातनमित्याहुः सर्वदृश्यं च शौनक ।
दिदृक्षा तव यद्यस्ति तत्र त्वं गन्तुमर्हसि ॥
नापरं शिवगङ्गायाः तीर्थं स्थानं चिदंबरात् ।
तन्मन्त्रान्नापरो मन्त्रः नास्तिदेवो नटेश्वरात् ॥
तदालोक्याप्नुहि फलं चार्मणस्यैव चक्षुषः ।

ஓ சௌனக பரமசிவன் கைலாச பர்வதத்தில் செய்யும் தாண்ட வத்தை உமாதேவி மட்டும் பார்க்கின்றாள். மற்றஜனம் பார்ப்ப தில்லை, புண்டரீகபுரத்தில் ஸ்ரீ சித்ஸபாநாதன் ஸ்ரீசித்ஸபையின் நடுவில் எப்பொழுதும் ஆனந்த தாண்டவஞ்செய்கின்றார். அந்த தாண்டவம் அநாதியாம். எல்லோராலும் காணத்தகுந்தது. உனக்குபார்ப்பதில் ஆசையிருக்குமானால் சிதம்பரம்போ, தீர்த்தம் க்ஷேத்ரம் மந்திரம் மூர்த்தி எல்லாம் அவ்விடத்தில் மிகச் சிறந்த திலும் சிறந்தது. அந்த தாண்டவத்தை தரிசித்தே உன் சர்ம சக்ஷுஸ்ஸினுடைய ஸாபல்யத்தை அடைஎன்று உபதேசித்தார்.

कैलासाद्रिमुखानि सन्ति भुवने स्थानानि भूयांसि ते
स्वामिन् तेषु सभापते विजयसे यत्किञ्चिदंशान्वितः ।
किन्त्वत्रैव समग्ररूपसहितः श्रीचित्सभायां सदा
तस्मादत्र भवन्तमेव भगवन् वन्देऽनिशं मामव ॥३४॥

ஓநாத! ஓ சபாநாயக!! கைலாசம் முதலான பலஸ்தானங்கள் உமக்கு இருக்கின்றன. அவ்விடத்தில் அம்சரூபமாகத்தான் இருக்கின்றீர். இந்தச்சிதம்பரத்திலோ ஸ்ரீ சித்ஸபையில் பூர்ண அம்சத்தோடு எப்பொழுதும் பிரகாசிக்கின்றீர். ஆகையால் ஓ பூஜ்யனே உம்மையே எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன். என்னைக்காப்பாற்றும். புண்டரீகபுரத்தில் சித்ஸபையில் மட்டும் பூர்ண அம்சத்தோடு பிரகாசிப்பதற்கு காரணத்தையும், பிர மாணத்தையும் அடுத்தஸ்துதியால் விசதமாய் நிரூபிக்கின்றார்(34)

त्वत्क्षेत्रेऽस्त्विदमुत्तमं हृदयगं यस्याद्विराजः प्रभो
यत्राव्यक्तिरुपैति सत्सुखचिदाकारस्य सर्वात्मनः ।
छन्दोगश्रुतिरत्र मानमपि सा निर्वक्ति या हृद्ययं
शब्दं तं हृदयं भजामि हृदये त्वामेव नित्यं विभो ॥३५॥

யாதொரு காரணத்தால் ப்ரபஞ்ச ரூபியான விராட்புருஷனுடைய ஹிருதயரூபமாக இச்சிதம்பரமிருக்கின்றதோ, சச்சிதானந்த ரூபியான சர்வாந்தர்யாமியான பரமாத்மாவுக்கு எந்த ஹிருதயத் தில் ப்ரகாசம் ஏற்படுகின்றதோ, அந்தகாரணத்தால் உம்முடைய ப்ரகாச ஸ்தானமான காசி, காஞ்சி, மதுரை முதலான பலக்ஷேத் ரங்களுக்குள் இச்சிதம்பரக்ஷேத்ரம் மிகவும் உத்தமமானது.

இவ்விஷயத்தில் சாந்தோக்யோபநிஷத் ராஜாஜ்ஞைபோல் ஸ்வதந்த்ர ப்ரமாணமாயிருந்துகொண்டும் தாய் குழந்தைகளிடம் கருணை பாராட்டுவதுபோல் வேதமாதாவும் ப்ராணிகளுடைய கருணையால் அர்த்தத்தை விசதமாய் போதிப்பதின்பொருட்டு நிர்வசனம் செய்து யுக்தி ரூபமாயும் போதிக்கிறாள். ஹ்ருதி ஹிருதயத்தில் அயம் இந்த மகாத்மா பிரகாசிக்கின்றார், என்கிற அர்த்தத்தையே ஹிருதய சப்தமானது போதிக்கிறது. ஆகலால் ஒப்ரபோ ஹிருதயத்தில் உம்மையே நித்யம் பஜிக்கின்றேன்!! ஸ்ரீஜாபாலதர்சனோபநிஷத் கைவல்யம் சூதசம்ஹிதை புண்டரீகபுர மாகாத்மியம் முதலான புராணங்களும் சிதம்பரம் விராட்புருஷ ஹிருதயஸ்தானமென்று கூறுகின்றது. சாந்தோக்யோபநிஷத் பிரம்மபுரமென்கிற சரீரத்தில் புண்டரீகாகாரமான ஹிருதய கிருஹத்தில் அதி சூக்ஷ்மமான ஆகாசத்தில் ஞானகாச ரூபியான பரமாத்மாவை அனுஸந்தானஞ்செய்யவேணுமென்று தஹரோபாசனத்தையும் ஹிருதயத்தில்தான் பரமாத்மவின் பிரகாச ஸ்தானமென்று ஹிருதயசப்த நிர்வசனத்தையும் கூறுகின்றது. இந்த தஹரோபாசன ஸ்தானமான ஹிருதய சப்தத்திற்கு ஆத்யாத்மிகமான மனுஷ்ய சரீர ஹிருதயமென்றும் ஆதிபௌதிகமான விராட்புருஷனுடைய ஹிருதயமான சிதம்பரமென்றும் இருவகையான அர்த்தத்தை பிரம்ஹஸூத்திரகர்த்தாவான வியாஸமஹர்ஷி ஜைமினி மஹர்ஷிக்கும் சூதமஹர்ஷிக்கும் புண்டரீகபுர மகாத்மியம் முதல் அத்தியாயத்தில் விசதமாய் உபதேசித்திருக்கின்றார். இந்த அபிப்பிராயத்தை ப்ரம்மஸூத்ரதஹராதிகரண பாஷ்யத்தில் நீலகண்டாசார்யாளும் சிதம்பரம் என்கிறபதத்தால் சூசித்திருக்கின்றார்கள். ஆதலால் பிரம்மபுரமான விராட்சரீரத்தினுடைய புண்டரீகரூப ஹிருதயரூபமான சிதம்பர சித்ஸபையில் தஹராசிதாகாச ரூபியான ஸ்ரீ நடராஜமூர்த்தியை தர்சிப்பது தஹரோபாசனமாகும் என்பதை சுருதிஸ்மிருதி புராணம் பிரம்ம ஸூத்திரம் முதலானதுகள் விசதமாய் போதிக்கின்றன. ஆதலால் இந்த சிதம்பரக்ஷேத்திரத்தில் வஸிப்பவர்கள் யாவர்களும் தஹரவித்யோபாஸகர்கள் என்கிறபடியாலும் ச்ருதி ரீதியாக தர்சனத்தினாலேயே முக்தியளிக்கும் க்ஷேத்ரமாகையாலும் ஹிருதய திருப்தியால் சரீரம் பூராவும் திருப்தியடைவதுபோல் சுருதி பிரமாணப்படி விராட் ஹிருதய புண்டரீகவாசியான நடராஜபூஜை

யால் ஸகலக்ஷேத்ர மூர்த்திகள் திருப்தி ஏற்படுகிறபடியாலும் ஸகல இந்திரியங்களும் ஹிருதயத்தில் சுஷுப்தியில் லயத்தை அடைவதுபோல் சகல க்ஷேத்ரங்களும் சிதம்பரத்தில் லயமடைவதாலும், க்ஷேத்ராந்தரத்தில் இருக்கும் தேவதைகள் யாவர்களும் அர்த்தயாம சமயத்தில் சிதம்பரம்வந்து தர்சிக்கிறபடியாலும், ஸ்வஸ்வரூபாநு சந்தானத்தால் தாண்டவஞ்செய்கிற இவ்வநடேச மூர்த்தியை முகூர்த்தகாலத்தியானஞ்செய்வதால் சர்வபந்த முக்தர்களாகின்றார்களென்று வராஹோபநிஷத் கூறுவதாலும், கைவல்ய சாந்தோக்ய ஜாபாலதர்சனாதி உபநிஷத் பிரதிபாத்ய மாகையாலும், அன்யதிவ்யக்ஷேத்ர தேவதைகள் உபதேசத்தால் மணிவாசகர், நந்தன் முதலான பக்தகோடிகள் சிதம்பரம்வந்து பரமுக்தியடைந்திருப்பதாலும் சூதஸம்ஹிதாதி பல புராணங்களால் போற்றப்பட்ட சிவகங்கை பரமானந்தகூபம்முதலான தசதிவ்ய தீர்த்தங்களோடு கூடியிருப்பதாலும், ஈசனுடைய அநேக க்ஷேத்ரங்களுக்குள் சிதம்பரம் மிகச்சிறந்ததென்பதை இந்த ஸ்துதியால் நிரூபித்திருக்கின்றார். (35)

(தொடரும்)

சிதம்பரம் ராஜா சோமசேகரதீக்ஷிதர்.

---

# ஸம்ஸாரவர்ணனம்.

(856-வது பக்கத்தொடர்ச்சி.)

த்வைத ப்ரபஞ்சம் அத்யாரோபத்தாற்றான் தோன்றும். அபவாதஞானத்தால் அது லயிக்கும். ஆகவே அக்ஞானமுள்ளவரை த்வைதப்ரபஞ்சமும் லயிக்காது. ஞானத்தால் அக்ஞான நாசம்வந்தால் லயித்துவிடும், அத்யாரோபப்பிரகாரத்தை நிருபிக்கிறோம், ஸாவதானமாய் தெரிந்துகொள்ளுங்கள், என்று பரமேசுவரன் சொல்லத்தொடக்கினர். முதலில் நானொருவனே இருந்தேன். அபிவியக்த நாமரூபமுள்ளதோ, அப்படியல்லாததோ, எவ்விதவஸ்துவும் வேறுபட்டதாயில்லை. எங்கும் பரிபூர்ணனும் சுயப்பிரகாசனும் இருந்தபடியால் நான் மஹாதேவன் எனப்படுவேன். ஸத்துவம், ரஜஸ், தமஸ், எனப்படும் முக்குணங்

களின் ஸாம்யாவஸ்தாவடிவமான மாயாசக்தி என்னுடைய வீக்ஷணத்தால் குணவைஷம்யத்தையடைந்து சுத்த சித்ரூபமான என்னிடம் அனாதியாகக் கற்பிக்கப்பட்டுத் தோன்றும் மாயா சக்தியும், அதில் பிரதிபிம்பித்த சித்ரூபியான யானும் ஒரே வஸ்துவாக மாயாசபள ப்ரம்மமென்றும், மாயாவிசிஷ்ட ப்ரம்மமென்றும், ஸகுணப்ரம்மமென்றும் வியவஹரிக்கப்படுவதாகும். அந்த ஸகுண ப்ரம்மத்திற்கே ஈசுவரன், காரணோபாதி, ஸாக்ஷீ அவ்வியாகிருதன், அந்தர்யாமி, என்பதாதிநாமங்களும், உபாஸகர்களின் மனதிற்கிசைந்த ரூபங்களும் சுருதிகளில் கூறப்படுகின்றன. ஸத்துவகுணமேலிட்டால் சுத்தஸத்துவப்ரதானமானமாயோபாதிகனுகிய பரமேசுவரன் ஸமஷ்டிபுத்தியென்றும், ஹிரண்யகர்ப்பபுத்தி என்றும் வியவஹரிக்கப்படும் மஹத் தத்துவத்தையும், ரஜோகுண மேலிட்டால் ஸமஷ்டி அஹங்காரத்தையும், தமோகுணமேலீட்டால் திருச்யமான ஆகாசாதிஜடவஸ்துக்களையும்கிரமமாய்சிருஷ்டித்தார். ஸமஷ்டிபுத்தியுள்ள ஹிரண்யகர்ப்பனே ஆதி ஜீவனுவான். அவனது ஸ்தூல சரீரம் விராட் எனப்படும் ஸமஷ்டிபூதங்களாகும். ஒவ்வொரு குணமேலீட்டாலாகிய வஸ்துக்களும் முக்குணமுள்ளதாகவே இருக்கும். ஆனுல் எந்தக்குணத்தின் மேலீட்டால் எது உண்டாகுமோ, அதில் அந்தக்குணம்அதிகமாகவேயிருக்கும். மற்ற இரண்டு குணங்கள் குறைவாயிருக்கும். ஆகவே எந்த வஸ்துவும் முக்குணமுடையதென்பதில் ஸந்தேகமேயில்லை. தமோ குணமேலீட்டால் தோற்றுவிக்கப்பட்ட ஆகாயம் முதலிய பூதங்களிலும் முக்குணங்களுமுண்டு. என்னுடைய வீக்ஷணத்தில் பட்ட தமோகுணம் அதிஷ்டானத்தின் பிரதிபிம்பத்தோடு விரிவடைந்து இந்த திருச்சிய ப்ரபஞ்சமாகும் விதத்தைக் கூறுவாம். ஸமஷ்டி அஹங்காரத்தினின்று ஆகாசதன்மாத்திரம் (ஸூக்ஷ்ம ஆகாசம்) பிறப்பிக்கப்பட்டது. ஆகாசத்தினுன்றும் வாயுவும், வாயுவினின்றும் தேஜஸ்ஸும், தேஜஸ்ஸினின்றும் ஜலமும், ஜலத்தினின்றும் பூமியும், ஸூக்ஷ்மவடிவமாக ஸிருஷ்டிக்கப்பட்டன. ஒவ்வொரு வஸ்துக்களுமுண்டாகும்பொழுது காரண வஸ்துவும் அதிற் புகுந்து அந்தந்தவடிவமாக ஆகிவிடுகின்றது. ஆகாசம் முதலான ஐம்பூதங்களுள் ஒவ்வொரு பூதத்தினின்றும் ஸத்துவாம்சத்தினின்று ஞானேந்திரியமும், ரஜோம்சத்தினின்று கர்மேந்திரியமும், தமோம்சத்தினின்று அந்தந்த இந்திரிய விஷ

யங்களும் உண்டாயின. எப்படியெனில் கூறுவாம். (1) ஆகாசத்தின் ஸத்துவாம்சத்தினின்று சுரோத்ரேந்திரியமும், ரஜோம்சத்தினின்றுவாக்கும், தமோம்சத்தினின்று சப்தமுமுண்டாயின. (2) இதுபோல் வாயுவின் ஸத்துவாம்சத்தினின்று துவக்கிந்திரியமும், ரஜோம்சத்தினின்று கைகளும், தமோம்சத்தினின்று ஸ்பரிசமும், (3) தேஜஸ்ஸின் ஸத்துவாம்சத்தினின்று நேத்திரேந்திரியமும், ரஜோம்சத்தினின்று கால்களும், தமோம்சத்தினின்று ரூபமும்,(4)ஜலத்தின் ஸத்துவாம்சத்தினின்று ஜிஹ்வேந்திரியமும், ரஜோம்சத்தினின்று பாயு என்னும் கர்மேந்திரியமும், தமோம்சத்தினின்று ரஸங்களும், (5)பிருதிவியின் ஸத்துவாம்சத்தினின்று கிராணேந்திரியமும், ரஜோம்சத்தினின்று உபஸ்தமும், தமோம்சத்தினின்று கந்தமுமுண்டாயின. ஆகாசாதிகளின் ஸத்துவ குண ஸமஷ்டியினின்று அந்தக்காணமும், ரஜோகுண ஸமஷ்டியினின்று பிராணனும், தமோகுண ஸமஷ்டியின்று விஷயங்களில் பற்றுற்று மயங்குதலுமுண்டாயின. பூதங்களின் ஸூக்ஷ்மாவஸ்தையினின்று உண்டானபடியால் இந்திரியங்கள் ஸூக்ஷ்மங்களாகவே இருக்கின்றன. இவ்விதமாக ஸூக்ஷ்ம பூதங்கள் ஞானேந்திரியம்5. கர்மேந்திரியம்5. விஷயங்கள்5. ஆக 5விதங்களான பூதங்களும் ஸூக்ஷ்மங்களாகவே இருந்துவிட்டால் வெளிப்பட்ட வியவஹாரத்திற்கு உபயோகப்படமாட்டாதெனக் கருதி அவைகளை ஸ்தூலமாக்க பஞ்சீகாணம் செய்தேன். அதாவது ஒவ்வொரு பூதத்தையும் பாதியாக்கி ஒருபாதியை நான்கு பாகங்களாக்கி அந்தப் பங்குகளை மற்றெருபூதங்களின் மற்றெரு பாகத்தில் சேர்ப்பதே பஞ்சீகாணமாம். அப்படிச் செய்தவுடன் ஸூக்ஷ்மங்களாயிருந்த பூதங்கள் ஸ்தூலங்களாய்விடுகின்றன. இது யுக்திக்குமொத்ததே. ஸூக்ஷ்மமான ஓர் விதை பூமியில் ஊன்றப்பட்டால் ஆங்கு மண், ஜலம், சூடு, காற்று, இடைவெளி ஆகிய இதர பூதங்களின் சேர்க்கையால் ஸ்தூலமாகி வளர்கிறதல்லவா? ஸ்தூல பூதம் ஒவ்வொன்றிலும் ஐம் பூதங்களின் சேர்க்கை இருப்பினும் ஆதிக்யத்தால் அந்தந்தப் பெயரே தனித்து வழங்கப்படுகிறது. இந்த ஸ்தூலபூதங்களைக்கொண்டே கீழேழு உலகங்களும், மேலேழு உலகங்களும், ஆகப் பதினன்கு உலகங்கள்கொண்டப்ரம்மாண்டமேற்பட்டது. அதுதான்ஸமஷ்டிஸ்தூல சரீரம். இதுதான் விராட்புருஷனதுசரீரம். இவ்விதமாக ஸமஷ்டி

ஸ்தூல பிரபஞ்சத்தை ஸிருஷ்டித்து அதில் அபிமானித்த்ஆதி ஜீவனை ஹிரண்யகர்ப்பனைப் படைத்து அனேகியான சுருதியையவருக்குப்புகட்டி அதிற்கூறியவண்ணம்வியஷ்டி (தனித்தனி)ஸ்தூல ப்ரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும்படி கட்டளையிட்டேன்.

இதனால் ஸமஷ்டிஸ்தூலபிரபஞ்ச ஸிருஷ்டிவரை ஸாக்ஷாத்தாக என்னாலேயே ஏற்பட்டது. வியஷ்டிப் பிரபஞ்சமெல்லாம் ஹிரண்ணியகர்ப்பன் மூலமாக என்னால் சிருஷ்டிக்கப்பட்டது. அதில் பூர்வகல்பத்தில் எந்தெந்த பிராணி எந்தெந்த கர்மவாஸனையோடு லயித்திருந்ததோ அந்த ப்ராணிகளுக்கு அந்தக் கர்மானுஸாரமாக சரீரபேதங்கள் கற்பிக்கப்பட்டன. முன் கல்ப்பத்தில் கர்மபூமியில் சுபகர்மங்களைச் செய்திருந்தவர்களுக்கு போகபூமியாகிய சுவர்க்காதிகளில் அந்தசுப கர்மாக்களின் பலாபலத்திற்கேற்றவாறு தேவாதி சரீரங்களும், அசுபகர்மங்களைச்செய்திருந்தவர்களுக்கு அந்த அசுபகர்மாக்களின் பலாபலத்திற்கேற்றவாறு நாரகதிர்யகாதி சரீரங்களும் முன்போலவே ஹிரண்யகர்ப்பரால் சிருஷ்டிக்கப்பட்டன. வேதசப்தத்தில் கூறியிருக்கும் விதத்தை ஆலோசித்துப்பார்த்து முந்திய ஏற்பாட்டுக்குக் கொஞ்சங்கூட மாறுதலில்லாமல் முன்போலவே கற்பித்தார். இந்த சரீரபேதங்கள் அண்டஜ(முட்டையினின்றுண்டாயது)மென்றும் ஸ்வேதஜ(புழுக்கத்தினின்றுண்டாயது)மென்றும், ஜாராயுஜ (கர்ப்பப்பையினின்றுண்டாயது) மென்றும்,உத்பிஜ்ஜ (பிளந்துகொண்டுண்டாவது) மென்றும் நான்குவகைகளாகும். அத்தகைய சரீரங்களில் அந்தக்காணாதிகளை உபாதியாகக்கொண்டு அபிமானம் வைத்தவர்கள் ஜீவாத்துமாக்களெனப்படுவார்கள். அந்தந்த ஜீவர்கள் தம்தம் கர்மபரிபாகத்திற்கேற்ப சுகதுக்கங்களை அனுபவிப்பதற்கு ஆஸ்பதமாக பஞ்சீகாணம்செய்யப்பட்ட பஞ்சமஹாபூதங்களால் அமைக்கப்பட்டதே வியஷ்டிஸ்தூலசரீரமாகும்.இதே அன்னமயகோசமெனப்படும். இதில் ஜீவன் ஜாக்ராவஸ்தையை அனுபவிக்கிறான். கர்மேந்திரியங்கள் 5. ஞானேந்திரியங்கள் 5. பிராணங்கள் 5. மனது புத்தி ஆகிய அந்தக்காணங்கள் 2. ஆக 17 வஸ்துக்கள்சேர்ந்த சமுதாயம், ஸூக்ஷ்ம சரீரமெனப்படும். இதில் 5 பிராமாணங்களும் 15 கர்மேந்திரியங்களும் பிராணமய கோசமாம். சங்கற்ப விகற்பவடிவமான மனதோடுகலந்த ஐந்து ஞானேந்திரியங்கள் மனோமயகோசமாம். நிச்சயவடிமான புத்தி

யோடுகலந்த அதே ஞானேந்திரியங்கள் விக்ஞான மயகோசமாம். ஆகவே ஸூக்ஷ்மசரீரத்தில் மூன்று கோசங்களடங்கி இருக்கின்றன. இதில் ஜீவன் ஸ்வப்னவஸ்தையை அனுபவிக்கிறான்.

(தொடரும்)

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## ஜநமேஜயன்.

1. பரீக்ஷித் மஹாராஜனது முதல் புதல்வன் இவன். இவன் மிகவும் சிறந்த குணமுடையவன். இவனுக்கு மூன்று ஸஹோதரர்களுண்டு. ஜநமேஜயனுக்குப் பெண்ணைக்கொடுக்கும்படி இவர் மந்திரி, காசிராஜனை வேண்டினர். காசிராஜன் இவரது உயர்ந்தகுணத்தையும் தர்மத்தையும் பரீக்ஷித்துப்பார்த்தார். இவரைவிட தர்மசீலன் வேறில்லை என்று எண்ணினர். தனது பெண்ணான வபுஷ்டமையைக் கொடுத்தார். கல்யாணம் நடந்தது.

2. தந்தையின் ராஜ்யமும் அவருக்குக் கிடைத்தது. தனது முன்னோர் எப்படி ராஜ்யத்தை ஆண்டனர்? எது தர்மவழி? எப்படி ஜனங்களை ஸந்தோஷப்படுத்துவது? என்று மந்திரிகளைக்கேட்பான். கொஞ்சமும் தர்மம்தவறமாட்டான். எல்லோரும் ஆச்சரியப்படும்படி எல்லாகுணமும் உள்ளவன். பெற்றவரிடத்திற் பேரன்பு கொண்டவன். குலத்தைக்காக்கும் குணசீலன் என்போர் இவனைப்பார்த்தவர். இப்படி அல்லவோ குழந்தை பிறக்க வேண்டுமென்பர் இவனைக்கண்டவர்.

3. தன் தகப்பனுக்குப் பாம்பினல் மரணம் உண்டானதை நினைத்து நினைத்து துக்கப்பட்டான். இதற்குப்பதில் என்ன செய்வதென்று யோசித்தான். தக்ஷகனையே குற்றவாளி என நிச்சயித்தான். ஏன்? இவன் கடித்துவிட்டு பேசாமல் போவதை விட்டு, மந்திரிக்கவந்த கச்யபரை ஏன் திருப்பி அனுப்பினன்? இவனை விடுவதில்லை. அவன் கூட்டத்தோடு அவனை அழித்துவிடுகிறேன். ஸ்வர்க்கத்திலுள்ள என் தந்தை இதைக்கண்டு சந்தோஷிக்கட்டும் என்று தீர்மானித்தான். ஸ்வர்க்கம் சென்றபிறகும் தந்தைக்கு ஹிதம் தேடுகிறவனல்லவா ஸத்புத்ரன். இருக்கும்போது சொற்படி நடக்கவேண்டும். இறந்தபிறகு

ச்ராத்தத்தில் யதேஷ்டமாக அன்னதானம் செய்யவேண்டும். கயையில் பிண்டம் போடவேண்டும். இம்மூன்றைச் செய்த வனே புத்ரன்.

4. உதங்கர் என்றரிஷிக்கு ஓர்பாம்பு ஒருதீங்கைச்செய்தது. ஆதலால் பாம்பை அழிக்க அவரும் கங்கணம்கட்டிக்கொண்டார். இருவரும் சேர்ந்தனர். பெரியோரை அழைத்தனர். யாகத்தை ஆரம்பித்தனர். வேதவ்யாஸரும் வந்தார். சுருணை சுருணையாக பாம்புகள் வந்து அக்னியில் விழுந்தன, ஏன்? அவை செய்தபாவம் என்னபாவம்! அவை தாய்சொன்ன சொல்லைக் கேட்கவில்லை. ஆதலால் அவள் சபித்தாள். தாய்சொல்லைத்தட்டலாமா? தாயை அல்லவோ முதலில் தெய்வமாகப் போற்றும்படி வேதம் சொல் கிறது. மாதா வயிறு எரிய வாழார் ஒருநாளும்! பேயானாலும் தாய் அல்லவா?

5. தக்ஷகனல்லவா இவன் தந்தையைக்கடித்தது? அவனுக் காக அல்லவா இந்த ஸர்ப்பயாகம்? தக்ஷகன் வந்தானா என்று ஜநமேஜயன் பார்த்தபடியே இருந்தான். அவன் வரவில்லை. அவன் இந்த்ரனிடம்போய் என்னைக்காப்பாற்று என சரண மடைந்தான். அவன் தக்ஷகனை காத்துவந்தான். இதை அறிந்து ரிஷிகள் அரசனிடம் சொன்னார்கள். ஆனால் இந்திரனோடு தக்ஷ கனைக் கூப்பிடுங்கள். அக்னியில் விழட்டுமென்றார் ராஜா. ஹோதா கூப்பிட்டார். இந்த்ரன் பலத்தைவிட மந்த்ரபலம் பெரிதல்லவா? இந்திரனுடன் சேர்ந்து தக்ஷகனை இழுத்தது மந்த்ரம். இவனுக் காகத் தன்னுயிரை விடுவானா இந்திரன்? தக்ஷகனை உதரித்தள்ளி விட்டான். ஆச்சு அக்னியில் விழப்போகிறான் தக்ஷகன்.

6. திடீரென ஒரு ரிஷி அரசனிடம் வந்தார். அவர்பெயர் அஸ்திகர். வாஸுகி எனும் பாம்பினால் தூண்டப்பட்டு இங்கு வந்தார் அஸ்திகர், வாஸுகி ஸஹோதரி ஜரத்காரு, அதே பெயர் கொண்டரிஷியின் புத்ரர் இவர், இவர் மிகப்படித்தவர் படித்தபடி நடப்பவர். இனிமையாகப் பேசுபவர். தனது முகத்தாலும் வாக்காலும் எவரையும் வசப்படுத்துபவர். அரசனருகேவந்தார். ராஜா எழுந்து ஆஸநமளித்தான். குசலம் கேட்டான். அதி தியைப் பூஜித்து என்ன வேண்டுமென்று கேட்டான்.

7. ஆஸ்திகர் அரசனை வாயாரப் புகழ்ந்தார். அவன்குணத் தைக்கொண்டாடினார். துதிக்கு வசப் படாதவருண்டோ?

ஸர்வக்ஞனை கடவுளே துதியைக்கேட்டு மகிழ்கிறார். கேட்ட வரத்தைக் கொடுத்துவிடுகிறார். அரசன் அகமகிழ்ந்தான் ஆநந்தப்பரவசனானான். ஸாதோ! வேண்டியதைக்கேளும் தரு கிறேன் என்றான். அரசே நீர் பாண்டவகுலத்திலே பிறந்தீர், பொய்சொல்லமாட்டீர். சொன்னபடி நடப்பீர், ஆயின் ஸர்ப்பயாகத் தைஇத்துடன் நிறுத்தும். இதே எனக்கு வேண்டியவரமென்றார்.

8. அரசன் அதற்கு ஆக்ஷேபம் சொல்லவில்லை. அப்படியே யாகத்தை நிறுத்திவிட்டான். உதங்கரும் மற்றவரும் நற்காரி யத்தைப் பூர்த்திசெய்யாமல் விடக் கூடாதென்றனர். அதற்கு வேறுப்ராயச்சித்தம் செய்வோம். அதைவிட மிகபாபம் சொன்ன சொல்லை மாற்றுவது என்றான். அரசன் யாகம்நின்றது. தக்ஷகன் தப்பினான். அஸ்தீகனை வாழ்த்தினான். அரசனை எல்லோரும் போற்றினர். அவன் தன் குலத்தவரிடம் பேரன்புகொண்டவன். தன் குலத்தைவளர்த்த வ்யாஸரைவணங்கினான். தன்முன்னோரது பெருமையைக்கூறுங்கள்என்றான்.

9. அதை அவர் பாரதமெனும் ஓர் பெரிய நூலாக எழுதி இருந்தார். அதில் வேதார்த்த ரஹஸ்யங்களெல்லாம் இருக் கின்றன. ஆகலால் ஐந்தாம் வேதமென்பர் பெரியோர் அதை. அதில் சொல்லாத தர்மமில்லை. கூறாதகதை இல்லை. வ்யாஸர் உத்திரவுபடி அவர் சிஷ்யர் வைசம்பாயனர் இதைச்சொன்னார். ஜநமேஜயர் கேட்டார். இவர்பெருமைபெறக்காரணமென்ன? தன் குலப் பெரியோரைப்போற்றி, அவர் நடந்தவழியைக் கடைப் பிடித்ததே. நாம் நமது பெரியோரை மறக்கலாமா? அவர்காட்டிய வழியை விடலாமா?

## வாரவிருத்தாந்தம்.

நல்லதர்மம். தீர்த்தயாத்திரை ஓர் சிறந்த தர்மம். பல ஆஸ் திகர்கள் பல்லாயிரம் மைல்களைத்தாண்டிவந்து க்ஷேத்ரதர்சநம் செய்கின்றனர். ஒவ்வொரு க்ஷேத்ரத்திலும் யாத்ரிகர் தங்குவது சிலநாட்களே. அந்த ஊருக்கு அவர் புதியவராதலால் தங்க இடம் எவரைக்கேட்பதென கவலைப்படுவது ஸகஜம். அத்தகை யோர்வந்து தங்கி தர்சநம்செய்து கவலையின்றிச்செல்ல ஆங் காங்கு பல தார்மிகர் தர்மசாலைகட்டி இருக்கின்றனர். திருநெல்

வேலி டவுனில் வடக்குரதவீதியில் ஓர் தர்மாபிமானியான வைச்யர் ஒரு ஸத்திரத்தைக்கட்டியிருக்கிறார். அதில் யாத்திரிகர்களுக்கு இலவசமாக இடமளிக்கப்படும். இந்த உயர்ந்த தர்மத்திற்கு ஈடாக எதைக்கூறமுடியும்? பழையதர்மசாலைகள் அநேகம் அழிந்துவருகின்றன. ஆஸ்திகர் இதை கவனிப்பாராக.

பாலக்ருஷ்ணஸபை தூத்துக்குடியில் ஷை பெயர்கொண்ட ஸபையொன்றுண்டு. சென்றவாரம் ஸபையார் ஓர் வித்வானைக்கொண்டு ஸ்ரீ ராமாயணத்தில் பலவிஷயங்களை உபன்யஸிக்கச் செய்தனர். சென்னை தொண்டமண்டலம் கலாசாலையில் பகவத்கதாப்ரஸங்க ஸபையார் வாரமிருமுறை தக்கவித்வானைக்கொண்டு ஸ்ரீமத் ராமாயணகாலக்ஷேபத்தை நடத்துகின்றனர். தம்புசெட்டிவீதி ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீபுராணப்ரவசந ஸபையார் ப்ரதிதினம் ப்ருஹ்மவைவர்த்த புராணத்தில் ஸ்ரீ க்ருஷ்ணஜன்ம கண்டத்தையும், திருவல்லிக்கேணி யதுகிரியதிராஜமடத்தில் ஸ்ரீ கீதைதத்வமும் உபன்யஸிக்கின்றனர். ப்ரதிக்ராமத்திலும் ஸத்கதை நடந்தால் இஹபரசுகத்தைப் பெறலாம்.

இதுதான் நல்லவழி. 19௳ சிதம்பரத்தில் வேதபாராயண ஸபை ஓர் வக்கீலின் தலைமையில் கூடி ஆண்டுதோறும் ஆருத்ரா உத்ஸவத்தில் ஸத்திரவ்யத்தைக்கொண்டு வேதபாராயணத்தை ஸ்திரமாகநடத்த தீர்மானித்தது. இதற்கு பெரும் முயற்சிசெய்தவர் ஓர் ஆஸ்திக வக்கில். அவர் கநாந்தம் அழகாக யஜுர்வேதாத்யயனம்செய்து நன்றாகச்சொல்லக்கூடியவர். வேதபாராயணத்திற்கு அபாரமானபலன்ஸ்மிருதிகளில்கூறப்படுகிறது. பிழைப்பிற்கு இடமில்லை என்பவர் வேதாத்யயநம் செய்வதை நிறுத்திவிட்டனர். தொன்றுதொட்டு இதுவரை நமது முன்னோர்களால் காக்கப்பட்டுவந்ததும் நமது மதத்தின் ஜீவகலையாயுமுள்ளவேதத் ரக்ஷிப்பது நமது கடமையன்றோ?

மற்றவரும் பற்றுவரோ? 26௳ சீர்காழி எஸ். எம். ஹைஸ்கூலில் புண்யதீர்த்தங்களும் க்ஷேத்ரங்களும் என ஒரு ஆஸ்திகர் உபன்யஸித்தார். மாணவர்கள் மேனாட்டு நாகரீகத்தையே மோக்ஷமார்க்கமென்றெண்ணி எல்லாவகையிலும் அதையாதரித்துவரும்போது ஆஸ்திகத்தை இளம்மூளையில் ஊட்டுவது மிகவும் அவச்யமானகார்யம். மற்றகலாசாலையார்களும் இதைப் பின்பற்றின் தர்மம் விருத்தியாகக்காரணமுண்டு.

நம்பினோர் நன்மையடைவர். 27௳முதல் சென்னை ஸ்ரீசங்கரமடம் புராண பக்தஸபையார் தேச நன்மையைநாடி வெய்யில்

கொடுமையால் பலர்வாடுவதையும் பயிர் தவிப்பபதையுங்கண்டு மனந்தாளாமல் விராடபர்வபாராயணமும், அவக்ரஹநிக்ரஹஜபமும் செய்துவந்தனர். நாலு நாளைக்கெல்லாம் சென்னையில் அபரிமிதமான மழை பொழிய ஆரம்பித்துவிட்டது. இன்னமும் மந்த்ரமஹிமை குறையவில்லை. ஆனால் ச்ரத்தைக்கேற்றபடிதான் பயனுண்டாகும்.

மண்டலாபிஷேகம். 25உ திருநாகேச்வரத்திலுள்ள ஸ்ரீவிச்வநாதஸ்வாமி கோவிலை ஜீர்ணோத்தாரணம்செய்து கும்பாபிஷேகத்தையும் சாஸ்த்ரோக்தமாகச்செய்துமண்டலாபிஷேகமும்நடந்தது. அன்றிரவு பஞ்சமூர்த்திகளும் நன்றாக அலங்கரிக்கப்பட்டு வீதி ப்ரதக்ஷிணம் மிக வைபவத்துடன் நடந்தேரியது, ஏழைகளுக்கு அன்னதானமும் நடந்தது. இவைகளை முன்னின்று தன உதவி செய்து நடத்திவைத்த கனவான் பகவானது பூர்ணகடாக்ஷத்திற்குப் பாத்திரமாவர். இக் கலிகாலத்தில் ஆலய நிர்மாணம் செய்து எண்ணிறந்த பக்தர்களுக்கும் மற்றவருக்கும் பக்தியை ஊட்டுவது ஸாமான்யமான தர்மமல்ல.

இதுதான் நியாயம். 29உ உப்பிலியப்பன் கோயிலில் ஸ்ரீநிவாஸப்பெருமாளது ஸன்னிதியில் கல்யாணோத்ஸவம் மிக சிறப்பாக நடந்தது. அங்கு பற்பல மதவிஷயமான உபன்யாஸங்கள் இவ்வாண்டு நடைபெற்றன. இங்ஙனம், உத்ஸவம், ஆலயம், பக்தி, ஆலயம் செல்லும் க்ரமம், முதலிய விஷயங்களைப் பண்டிதர்களைக் கொண்டு உபன்யசிக்கும்படி மற்ற ஆலயங்கள் ஏற்பாடு செய்வது அத்யாவச்யமான கார்யம். அக்ரமமாக ஆலயங்களும், ஸ்ரீமடங்களும், பணத்தைச்சேர்த்து செலவழிக்கின்றன என்று பலர் துஷ்ப்ரசாரம் செய்யுமிக் காலத்தில் உண்மையை உலகிற்கு ஊட்டுவது தர்மம்.

உத்தம கைங்கரியம்! கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலுக்கெதிரில் ஓர்பக்தர் ஆஞ்சநேய ஆலயங்கட்டி அதற்கென ஓர் ரதம் செய்து, அந்த ரதம் நிற்க ஓர் மண்டபமும்கட்டினார். 14உ தற்கால நாகரீகத்தின்படி ஓர் கனவானைக்கொண்டு அதைத் திறக்கச்சொன்னார். இதுகிடக்கட்டும். இப்பெருங்கைங்கர்யத்தை விடா முயற்சியுடன் நடத்திய பக்தனைக் கொண்டாடாமலிருப்பதற்கில்லை. கோவில்மூலம் எவ்வளவு ஏழைகள் ஜீவிக்கின்றனர் எனத் தற்காலத்தவர் கவனிக்கட்டும்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.